இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

# பரீட்சகரின் அறிக்கை

## AA2 பரீட்சை – 2019 சனவரி

## (AA25) வியாபாரச் சட்டமும் ஒழுக்கநெறிகளும்

---

### பகுதி A

### வினா இல. 01

இவ்வினா 20 புள்ளிகளுக்கான 10 OTQs இனைக் கொண்டிருந்தது.

இவ்வினாவுக்கு அதிகளவான பரீட்சார்த்திகள் விடையளிக்க முயற்சித்திருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்தப் புள்ளிகளில் அரைவாசிக்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் வினா இலக்கங்கள் **1.9** மற்றும் **1.10** ஆகியவற்றுக்குச் சரியாக விடையளிக்கத் தவறியிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

சில பரீட்சார்த்திகள் வினா இல. **1.9** இற்கு ஒழுங்குபடுத்தும் நிறுவனங்களாக பல்வேறு நிறுவனங்களைப் பெயரிட்டிருந்தனர். பெரும்பாலானவர்கள் வினா இல. **1.10** இற்கு தவறான விடைகளையே அளித்திருந்தனர். அவர்கள் இரகசியத்தன்மை என்னும் எண்ணக்கரு பற்றி விளங்கிக் கொண்டிருக்கவில்லை.

இப்பகுதியானது சித்தியடைவதற்கான புள்ளியை அடைவதற்கு பெரியளவில் பங்களிப்புச் செய்வதால் பரீட்சார்த்திகள் உயர்ந்தளவு புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதற்காக கிட்டத்தட்ட முழுப் பாடத்திட்டம் தொடர்பிலும் ஆழமான அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**மொத்தத்தில் இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.**

### பகுதி B

### வினா இல. 02

இவ்வினா முகவராண்மைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இதற்கு பொருத்தமானது அவசியத்தன்மை மூலமான முகவராண்மை என்பதாகும். அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவை விளங்கிக்கொள்ளத் தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் மாத்திரமே சரியான விதியை இனங்கண்டிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விளக்கத்தை வழங்குவதற்குத் தவறியிருந்தனர். இந்த நடைமுறைசார்ந்த சம்பவத்தில் **தயாபரன்** உருக்கினை விற்பனை செய்வதற்கான அவசியத்தன்மை காணப்படவில்லை. ஏனெனில் உருக்கு பழுதடையக்கூடிய ஒரு பொருள் அல்ல. அந்த எண்ணக்கரு பெரும்பாலானவர்களால் கண்டுணரப்படவில்லை.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை குறைவானதாக இருந்தது.**

## வினா இல. **03**

இது இலகுவானதும் நேரடியானதுமான வினாவாகும்.

**பகுதி (a)** – இந்தப் பகுதி நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் திருப்திகரமான விடைகளையும் வழங்கியிருந்தனர். எவ்வாறாயினும், சில மாணவர்கள் குற்றங்களை எழுதுவதற்குப் பதிலாக நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை பற்றி எழுதியிருந்தனர்.

**பகுதி (b)** - இந்தப் பகுதி பண மோசடித் தவிர்ப்புச் சட்டம் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் திருப்திகரமான விடைகளையும் வழங்கியிருந்தனர். எவ்வாறாயினும், சில மாணவர்கள் **பகுதி (b)** இற்கு சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

## வினா இல. **04**

இது பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்துடன் தொடர்புடைய ஓரளவு இலகுவான ஓர் வினாவாகும். இந்த வினாவில் 2 பகுதிகள் காணப்பட்டன.

- **(a) பகுதி** விற்பனை ஒப்பந்தம் என்றால் என்ன என்பதையும்
- **(b) பகுதி** இலவசங்கள் வழங்கி மேற்கொள்ளப்படுகின்ற ஊக்குவிப்புகள் பற்றியும் பரீட்சித்திருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இரு பகுதிகளுக்கும் சரியான விடைகளைக் குறிப்பிட்டிருந்தனர். ஆனால் சில மாணவர்கள் அன்பளிப்புகள் ஏன் பொருட்கள் விற்பனை ஒப்பந்தமாகக் கருதப்படுவதில்லை என்பதைச் சரியாக விளக்கியிருக்கவில்லை. சிலர் விற்பனை ஒப்பந்தம் என்றால் என்ன என்பது பற்றியும் விடையளித்திருக்கவில்லை. பொருள் வரையறையில் முக்கியமான சொற்கள் காணப்படுகின்றன. சிலர் அது ஒரு பணச் சலுகை என்பதை மாத்திரம் குறிப்பிட்டிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

## வினா இல. **05**

இவ்வினா ஒரு நடைமுறைசார்ந்த சம்பவம் மீதான மாற்றத்தகு சாதனங்கள் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்த போதிலும், அவர்கள் ஒவ்வொரு விடயமாக சரியானவாறு விளங்கப்படுத்தியிருக்கவில்லை. சில விடயங்களை தரப்பட்ட சம்பவத்திலிருந்து சேகரித்திருக்க முடியும். சில மாணவர்கள் சரியாக விளங்கப்படுத்தியிருந்தனர், ஆனால் பணத்தினை மீளப்பெறுவதற்கு **சாம்** உரித்துடையவரா என்பது பற்றிய இறுதி முடிவினை அவர்கள் எழுதியிருக்கவில்லை.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

## வினா இல. **06**

இவ்வினா நாணயக் கடிதம் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இது சர்வதேச வர்த்தகத்துடன் தொடர்புடையது என்று மாத்திரம் குறிப்பிட்டிருந்தனர். ஆனால் அவர்கள் நாணயக் கடிதம் பற்றிச் சரியான விளக்கங்களைத் தந்திருக்கவில்லை. நாணயக் கடிதம் ஒன்றை யார் திறக்க முடியும், நாணயக் கடிதத்தின் கீழ் எவ்வாறு கொடுப்பனவு செய்வது போன்றவற்றை அவர்கள் எழுதுதல் வேண்டும்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானதல்ல.**

## பகுதி C

### வினா இல. 07

இவ்வினா தொழில் சட்டம் பற்றிப் பரீட்சித்திருந்தது.

**பகுதி (a)** - இந்தப் பகுதி 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேம நிதியச் சட்டம் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் **செத்சேவா பவுண்டேசன்** என்பது ஓர் தர்ம ஸ்தாபனம் என்பதைக் குறிப்பிட்டிருந்தனர். எனவே EPF சட்டம் இதற்குப் பொருத்தமற்றது. ஆனால் அவர்கள் நிறுவனத்திலுள்ள ஊழியர் எண்ணிக்கை பற்றிக் குறிப்பிடவில்லை.

தற்காலிக ஊழியர்கள் EPF சட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுகிறார்கள் என்பதை மாணவர்கள் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். இது ஒரு தர்ம ஸ்தாபனமாக இருந்த போதிலும் ஊழியர்கள் எண்ணிக்கை 10 இற்கு அதிகமாக இருந்திருப்பின் EPF இன் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும்.

**பகுதி (b)** - இந்தப் பகுதி பணிக்கொடைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் பணிக்கொடையைக் கணிப்பிட்டிருந்தனர். சிலர் பணிக்கொடையைக் கணிப்பிடும் போது, கடந்த மாதச் சம்பளத்தினது ½ பங்கினைக் கவனத்திற் கொண்டிருக்கவில்லை.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

### வினா இல. 08

இது பங்குடமைச் சட்டத்துடன் தொடர்புடைய ஓரளவு இலகுவான வினாவாகும். இது பங்குடமையொன்றினது பங்காளர்களின் தன்மை, உரிமைகள் மற்றும் கடமைகளை அடிப்படையாகக் கொண்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் பங்காளர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தனர். ஆனால் அவர்கள் தரப்பட்ட நடைமுறைச் சம்பவத்துடன் அதனைத் தொடர்புபடுத்தியிருக்கவில்லை. **கமல்** ஏனைய பங்காளர்களின் சம்மதத்துடன் மாத்திரமே தனது மனைவியை பங்காளர் ஒருவராக சேர்த்துக்கொள்ள முடியும் என்பதை மாணவர்கள் குறிப்பிடுதல் வேண்டும். மேலும் **கீதா** வியாபாரத்திலிருந்து மேலதிக தொகையினைப் பெறுவதற்கு உரித்துடையவர் அல்ல. தீர்மானம் எடுக்கும்போது, ஒரு பங்காளர் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பின் அதனை நடைமுறைப்படுத்த முடியாது. மாணவர்கள் வினாவுக்கு விடையளிக்கும்போது சம்பவத்திலிருந்து விடயங்களை இலகுவாகச் சேகரித்துக்கொள்ள முடியும்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

### வினா இல. 09

இது காப்புறுதிச் சட்டத்துடன் தொடர்புடைய ஓரளவு இலகுவான வினாவாகும். அதிகளவான பரீட்சார்த்திகள் **பகுதி (a)** மற்றும் **பகுதி (b)** ஆகியவற்றுக்குச் சரியாக விடையளித்திருந்தனர். பகுதி **(a)** இல் அவர்கள் காப்புறுத்தக்கூடிய அக்கறை எண்ணக்கருவினை அங்கீகரித்திருந்தனர். விடயங்களை சம்பவத்திலிருந்து எடுத்துக்கொள்ள முடியும். தீ விபத்து ஏற்பட்ட போது, அது **மதுரவி**னுடையது அல்ல. ஆனால் இழப்பினை அடைந்த கம்பனியும் அவரும் சேதமடைந்த ஆதனத்தில் காப்புறுத்தக்கூடிய அக்கறையொன்றினைப் பகுதியளவில் கொண்டிருக்கின்றனர். அதே போன்று சில மாணவர்கள் காப்புறுதிக் கம்பனி உரிமைக் கோரிக்கையை நிராகரிக்க முடியும் என்பதைக் குறிப்பிட்டிருக்கவில்லை.

**பகுதி (b)** இல் கேட்கப்பட்ட இழப்பீட்டு எண்ணக்கரு பற்றி பெரும்பாலானவர்களால் விளக்கப்பட்டிருந்தது. ஆனால் சிலர் சகல 4 புள்ளிகளையும் பெறுவதற்காக ஒரேயொரு வசனம் மாத்திரம் எழுதியிருந்தனர். அது சரியாக விளங்கப்படுத்தப்பட வேண்டியிருந்தது. மாணவர்கள் இழப்பீட்டு எண்ணக்கருவின் கீழ் காப்புறுதி ஊடாக இலாபம் சம்பாதிக்கப்பட முடியாது என்பதை எழுதுதல் வேண்டும்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

## பகுதி D

**வினா இல. 10**

இவ்வினா இரண்டு பகுதிகளை உள்ளடக்கியிருந்தது. இவ்வினாவின் **பகுதி (a)** ஆனது ஒப்பந்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது.

**(i)** அதிகளவான பரீட்சார்த்திகள் **ரொமேஷ்** மற்றும் **பிரியா** ஆகியோருக்கிடையில் செல்லுபடியான ஓர் ஒப்பந்தம் காணப்படவில்லை எனக் குறிப்பிட்டிருந்தனர். **ரொமேஷ்** அவருடைய ஏற்பனவு பற்றி **பிரியா**வுக்கு அறிவித்திருக்கவில்லை.

அத்துடன் **ரொமேஷின்** வெறும் அமைதி அல்லது செயலற்ற தன்மையானது உட்கிடையான ஏற்பனவு ஒன்றல்ல என்பதையும் அவர்கள் குறிப்பிட்டிருந்தனர். ஆனால் அவர்கள் தொடர்புடைய காரணங்களைக் குறிப்பிட்டிருக்கவில்லை.

**(ii)** **மல் மல் மலர்ச்சாலை**க்கும் **பிரியா**வுக்குமிடையில் செல்லுபடியான ஓர் ஒப்பந்தம் காணப்படுகிறது. ஒப்பந்தத்தை சரியானவாறு நிறைவேற்றும் பொருட்டு அவர்கள் போதுமானளவு ரோஜாக்களை களஞ்சியப்படுத்தியிருக்க வேண்டும் என்பதால் மலர்ச்சாலைப் பக்கத்திலிருந்து புறக்கணிப்பொன்று காணப்படுகிறது. **பிரியா** ஒப்பந்த மீறுகைக்கான சேதத்திற்காக இழப்பீடு கோர முடியும்.

பல பரீட்சார்த்திகள் மேலுள்ளவற்றைக் குறிப்பிட்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் **பிரியா மல் மல் மலர்ச்சாலை**க்கான மீதிப் பணத்தினைச் செலுத்துவதற்கு சட்டரீதியாகக் கட்டுப்பட்டுள்ளார் எனக் குறிப்பிட்டிருந்தனர். ஆனால் அவர்கள் சரியானவாறு காரணங்களை விவாதித்திருக்கவில்லை. வெள்ளம் மற்றும் பாதை தடைப்படல் என்பன அவர்களது கட்டுப்பாட்டை மீறிய விடயங்கள் என்பதை அவர்கள் குறிப்பிட்டிருக்க வேண்டும். எனவே அவர்களால் 100% உடன்படிக்கையை செயல்படுத்த முடியவில்லை. எவ்வாறாயினும் சில பரீட்சார்த்திகள் திருப்திகரமாக விடையளித்திருக்கவில்லை.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

**பகுதி (b)** ஆனது பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

**(i)** **தீனா**வுக்கும் ஸ்கின் அன்ட் ஹெயா கெயார் இற்குமிடையிலான ஒப்பந்தமானது ஓர் பொருட்கள் விற்பனை ஒப்பந்தமாகும். இரண்டு உட்கிடையான நிபந்தனைகள் இந்த ஒப்பந்தத்தினுள் உள்ளிடப்பட்டுள்ளன. அவை நோக்கத்திற்கான இயைபு மற்றும் வணிகத் தரம் என்பனவாகும். ‘‘பொருளானது நோக்கத்திற்கு இயைபுடையதாக இருக்க வேண்டும்’’ என்றும் ‘‘வணிகரீதியான தரத்தைக் கொண்டிருக்க வேண்டும்’’ என்றும் பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டம் கூறுகிறது.

அதிகளவான பரீட்சார்த்திகள் ஒரு நிபந்தனையை மாத்திரம் குறிப்பிட்டிருந்ததுடன் **தீனா**, ஸ்கின் அன்ட் ஹெயா ஹெயார் சலூனிடமிருந்து சேதத்திற்கான இழப்பீட்டைக் கோர முடியும் எனவும் குறிப்பிட்டிருந்தனர். ஆனால் அவர்களில் பலர் தொடர்புடைய காரணங்களைக் குறிப்பிட்டிருக்கவில்லை என்பதுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டதன் காரணமாக **தீனா** சேதத்திற்கான இழப்பீட்டைக் கோர முடியும் எனக் குறிப்பிட்டிருந்தனர்.

**(ii)** **சுராஜ்** இற்கும் **பியூட்டிபுல் ஹோம்ஸ் (பிரை) லிமிட்டெட்** இற்குமிடையிலான ஒப்பந்தமானது ஓர் பொருட்கள் விற்பனை ஒப்பந்தமாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் **சுராஜ்** குறித்த வடிவமைப்பு பற்றி விசேடமாக அறிவுறுத்தியிருந்ததுடன் 2 வாரங்களினுள் அதனை கையளிக்கப்பட வேண்டுமெனவும் அறிவுறுத்தியிருந்தார்.

இந்த நடைமுறைசார் சம்பவத்தில் அதிகளவான பரீட்சார்த்திகள் **சுராஜ்** சேதத்திற்காக இழப்பீடு கோர முடியுமெனக் குறிப்பிட்டிருந்தனர். ஆனால் **சுராஜ்** இனால் கட்டளையிடப்பட்ட பொருள் குறிப்பான மற்றும் அறுதியிட்ட பொருளாக இருக்கிறது என்பதை அவர்கள் குறிப்பிட்டிருக்கவில்லை.

அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் 70% இற்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**மொத்தத்தில், வினாவின் இந்தப் பகுதிக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

\- - -

**<u>பரீட்சார்த்திகளின் தேர்ச்சி மட்டத்தினை மேம்படுத்தும் பொருட்டு கவனத்திற்கொள்வதற்கான பொதுவான விடயங்கள்:</u>**

**(1)** பாடத்திட்டத்தை முழுமையாகவும் ஆழமாகவும் படிப்பதுடன் புதிய பாட விடயங்கள் மீது கூடிய கவனத்தையும் செலுத்தவும்.

**(2)** வினாவினைப் பல தடவைகள் வாசித்த பின் குறிப்பிட்ட மற்றும் நேரடியான விடைகள் எதிர்பார்க்கப்படுமிடத்து தேவையற்ற விபரிப்புகளை / விபரங்களை எழுத வேண்டாம்.

**(3)** வினைச் சொல் நிரல் ஒன்று வினாப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச்சொல்லினைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச்சொல்லின் வரைவிலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

**(4)** சுய கற்றல் பாடநூல், புத்தகங்கள், கையேடுகள், மடல்கள், சஞ்சிகைகள் மற்றும் பாடத்துடன் சம்பந்தப்பட்ட ஏனையவற்றை படிக்கவும்.

**(5)** விடையெழுதும்போது சரியாக அடையாளம் கண்டு அவற்றை அடிப்படைக் கோட்பாட்டு எண்ணக் கருக்களுடன் ஒப்பிடுவதற்கும் தேவையான ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளுங்கள்.

**(6)** கையெழுத்து தெளிவாக இருப்பதையும் வினா இலக்கங்கள் உரிய இடத்தில் சரியாகவும் ஏற்றவாறும் இடப்பட்டிருப்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**(7)** வினாப்பத்திரத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கடைப்பிடியுங்கள்.

**(8)** கடந்தகால வினாப்பத்திரங்கள் மற்றும் விடைகளைக் கற்பதன் மூலம் உங்கள் அறிவினை மேம்படுத்திக்கொள்ளுங்கள்.

**(9)** முறையான நேர முகாமை.

**(10)** விடைப்பத்திரங்களை ஒப்படைப்பதற்கு முன் வினா இலக்கங்கள் உரியவாறு உரிய இடங்களில் இடப்பட்டுள்ளனவா என்பதை முறையாகப் பரீட்சிக்கவும்.

**(11)** முன்னாயத்தத்துடனும் வெற்றியடையும் எதிர்பார்ப்புடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

\- * * * -